மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு– முன்னிலையில், பா.பிரபாகரன் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு – திருநங்கைகளுக்கு– சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.சாசர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக திரு.வி.க. நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்–11, உதயம் வருவது கீழ்திசை! ஒலிக்கட்டும் நமது வாழ்த்திசை எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நேற்று 04.12.2024 புதன்கிழமை அன்று மாலை 6 மணியளவில், சென்னை, ஓட்டேரி, ப்ரிக்ளின் சாலை எஸ்.ஆர். திருமண மஹாலில் சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் பா.பி.தாஸ் தலைமையில் நடைபெற்ற பேச்சரங்கத்தில் திராவிட இயக்க தமிழர்பேரவை தலைவர் –சமூகநீதி பணிக்குழு செயலாளர் சுப.வீரபாண்டியன் – கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம்.செல்வேந்திரன் – கழக கொள்கைபரப்புச் செயலாளர் சபாபதி மோகன் – கழக செய்தி தொடர்பாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இப்பேச்சரங்கத்தில் மேயர் பிரியா ராஜன் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி,பகுதி செயலாளர்கள் எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன், இசட்.ஆசாத் எம்.சி, மற்றும் கழக முன்னோடிகள், இளைஞர் அணி செயல் வீரர்கள், மகளிர் அணியினர் பொதுமக்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு பல் மருத்துவமனையில் ரூ.128.99 கோடியில் கட்டுமானப் பணிகள்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, டிச. 5 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (4.12.2024) சென்னை, தமிழ்நாடு அரசு பல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.38 இலட்சம் செலவிலான உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் பயனாளிகளுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர், ரூ.128.99 கோடி மதிப்பிலான தமிழ்நாடு அரசு பல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை ஆய்வு மேற்கொண்டனர்.

மின்சார ஊர்தி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்

தமிழ்நடு அரசு பல் மருத்துவக்கல்லூரி மருத்துமவனையில் தினசரி சுமார் 1500 பயனாளிகள் பல் சிகிச்சைக்காக பல் மருத்துவமனைக்கு வருகிறார்கள். புற நோயாளிகள் பகுதி தரை மட்டத்திலிருந்து மிகவும் உயரத்தில் உள்ளது. வயதான பயனாளிகள் மற்றும் இணை நோய்கள் உள்ளோர்கள் பல்வேறு துறைகளுக்குச் செல்ல ஏதுவாக State Bank of Indian - CSR நிதியின்கீழ் ரூ.5 இலட்சம் செலவில் மின்சாரம் மூலம் இயக்கப்படும் பயணிகள் வாகனத்தை அமைச்சர் பெருமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர். பிறகு ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO) கருவிக்கான பணிகள் செயல்படுத்தப்பட வுள்ளது, இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அமைச்சர் பெருமக்கள் கொண்டு நடைபெற்றது.

உள்விளையாட்டு அரங்கம் ஸ்மார்ட் போர்டு:

மாணவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கும் மன ஆரோக்கியத்திற்கும் விளையாட்டில் ஈடுபடுவது மிகவும் முக்கியம் ஆகும். அதன்காரணமாக மாணவர்களுக்கு விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் ரூ.19.28 இலட்சம் செலவில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இதன்பிறகு, ஸ்மார்ட் போர்டு ரூ.2.50 இலட்சம் செலவில் 75 அங்குலம் அளவிலான 2 ஸ்மார்ட் போர்டுகள் இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இதில் 2 ஸ்மார்ட் போர்டுகள் ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பல் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடைபெறும் கட்டுமானப்பணிகள்

ரூ.64.09 கோடி மதிப்பீட்டில் 1,34,764 சதுரடி பரப்பளவில் 3 முதல் 6 தளங்களில், செயற்கை பல் கட்டும் துறை, ஈறு நோய் சிகிச்சை துறை, பல் சீரமைப்பு துறை, குழந்தைகள் பல் மருத்துவத் துறை, வாய்நோய்குறியியல் துறை, சமுதாய பல் பாதுகாப்பு துறை, ஆய்வகம், தேர்வு கூடம், கருத்தரங்கு கூடம், போன்ற வசதிகளுடம் கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் ரூ.64.90 கோடி மதிப்பீட்டில் 1,50,136 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 13 தளங்களுடன் பார்வையாளர்கள் அறை, மருத்துவ அறை, சமையலறை, படிக்கும் அறை, பொழுது போக்கு அறை, உடற்பயிற்சி கூடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் கூடிய 274 தங்கும் அறைகள் கொண்ட முதுகலை மற்றும் இளநிலை பல் மருத்துவ மாணவியர்களுக்கான தங்கும் விடுதி கட்டிடப்பணிகளும் நடைபெற்று வருகிறது. இப்பணியினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களும் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ.சங்குமணி, தமிழ்நாடு அரசு பல் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.ஸ்ரீ. பிரேம்குமார், மருத்துவப் பேராசிரியர்கள், பொதுப் பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! வட்ட செயலாளர் எஸ்.பி.கோதண்டம் தலைமையில்

142 (அ) வட்டத்தில் மாபெரும் தெருமுனை கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன், சரத்பாலா, ரா.யோகஸ்ரீ சிறப்புரை! தமிழச்சி தங்கபாண்டியன், மு.மகேஷ்குமார், பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

சென்னை, டிச.5-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி 142 (அ) வட்ட தி.மு.க சார்பில் நவம்பர் 27 மனித நேய உதய நாள் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி தெருமுனை கூட்டம் (06.12.2024 - வெள்ளிக்கிழமை) அன்று மாலை 5.00 மணியளவில் சைதாப்பேட்டை சுப்பிரமணிய சாலையில் மாபெரும் தெருமுனை கூட்டம் வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கிறஞர் எம்.ஸ்ரீதரன், எம்.சி, முன்னிலையிலும், பகுதி துணை செயலாளர் ஆர். ரமேஷ், வட்ட செயலாளர் எம்.நாகா, மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.எல்.செல்வம், பொன்ஜெய்சிங், பால்கார்ரவி, வட்டக் கழக நிர்வாகிகள் எம். ஷேக்தாவூத், ஆர்.எல்.காந்தன், பி.தேவிகா, பி.வரதராஜன், ஆம்பூர்ரவி, எஸ். பாரதிபாஸ்கர், வே.பிரபு ஆகியோர் வரவேற்பில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர் சரத்பாலா, தலைமை கழக இளம் பேச்சாளர் ரா.யோகஸ்ரீ ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவை தலைவர் எஸ்.குணசேகரன், தொகுதி பொறுப்பாளர் பரிதி இளம்சுருதி, எம்.சி, பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர்கள், சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், எம்.எஸ்.அரிபாபு, அஞ்சல் ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என். சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர். ரவி, ஜி.பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.எஸ்.பழனி, எம்.எஸ். பழனி, டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்பந்தம், கு. கார்த்திகேயன், வெ. கிஷோர்குமார், கே.தாஸ், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், அ.தமீம்அன்சாரி, தீ.ராஜ்குமார், மாவுமில்ஸ்ரீதர், எம்.மாறன், பகுதி அமைப்பாளர்கள் த.மணி, ஜி. ஜே.மோசஸ், ஆர்.எஸ். ரமேஷ், கோயில்எஸ்.மணி, ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, ஆட்டோஜான், இரா.பாபு, பிடி சிகுமார், இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்பிரபு, இரா. வெங்கடேசன், ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா,

142 வது வட்ட நிர்வாகிகள் ஆர்பார்முனுசாமி, எப்.சாகுல்அமீது, கேபிள் எம்.முருகன், ஆர்.கோபி, எம்.கதிர், கே.முருகேசன், வி.பி.காந்தி, கே.விஜய், ஆர்.மோகன், கே.கசாலி, அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள் கே.அன்சர்கான், ஜி.உதயகுமார், கே.நரேஷ், ஆர்.வாசு, ஆர். சசி, எ.ரகு, பெரியண்ணன், இந்து உதயா, எம். ரவி, எஸ்.ரமேஷ், எம். பெருமாள், ஆர்.டி. மூர்த்தி, ஜே.சம்பத், கேபிள்மணி, ராமு, சுரேஷ், கார்த்திக், முத்து, வட்ட செயற்குழு உறுப்பினர்கள் பி.சிவகுருநாதன், எஸ்.தமிழ்ச்செல்வன், ரூபேஷ்குமார், அன்புசெழியன், எஸ்.செல்வம், சுரேஷ், சதிஷ், தினேஷ் ராம், எஸ்.விஜயகுமார், ஆர்.செல்வம் உள்ளிட்ட கழக முன்னோடிகள் பெருதிரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்தின் நிறைவாக வட்ட துணை செயலாளர்கள் கே.சி.பழனிபாரதி, வீடியோ எஸ்.எழில், பகுதி பிரதிநிதி எம். பாலாஜி ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

பி.பாலசந்தர் தலைமை! எஸ்.மதன்மோகன் எம்.சி. முன்னிலை!

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் 500 பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

தயாநிதி மாறன் எம்.பி - மு.க.தமிழரசு - நே.சிற்றரசு - எஸ்.ஜோயல் வழங்குகின்றனர்!

சென்னை, டிச. 5 -

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 500 பள்ளி மாணவர்களுக்கு ஓவியம் தீட்டும் உபகரணங்கள் வழங்கும் விழா நாளை (6.12.2024 - வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மேற்கு கூவம் ஆறு சாலையில் உள்ள அரசு மேல்நிலை பள்ளியிலும், குருவப்பா செட்டி தெருவில் உள்ள அரசு நடுநிலை பள்ளியிலும், ஆதிகேசவன் தெருவில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியிலும், ஐய்யர் தெருவில் உள்ள ஆர்.பி.என்.சி.சி. பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஓவியம் தீட்டும் உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பி.பாலசந்தர் தலைமை வகிக்கிறார்.

சேப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர், 9 வது மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன், மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் 62 வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.ஜெகதீசன், 62 (அ) வட்டக் கழகச் செயலாளர் கே.மகேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே. குட்டி, ஜெ.எம்.எச்.இம்ரான் ஆருண், வி.தினேஷ் குமார், என்.மோகனவேல், பகுதி துணை அமைப்பாளர்கள் ஜி.ஜெ.கிரிதரன், என். சுரேஷ், பி.சலாவுதீன், ஜி.வி.பாலாஜி, என்.குமரன் மற்றும் கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எ.நாகராசன் எம்.சி தலைமை! என்.சௌந்தர் - என்.பவுல்ராஜ் முன்னிலை!

கே.யுவனேஷ் - கே.ஸ்ரீநாத் இல்லத் திருமண வரவேற்பு விழா!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

சென்னை, டிச. 5

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.யுவனேஷ் மற்றும் கொளத்தூர் மேற்கு பகுதி, 65 வது வட்டம், இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஸ்ரீநாத் ஆகியோரின் இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று (5.12.2024வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை, பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கொளத்தூர் மேற்கு பகுதிச் செயலாளர் ஏ.நாகராசன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

65 வது வட்டக் கழகச் செயலாளர் என்.சௌந்தர், 65 (அ) வட்டக் கழகச் செயலாளர் என்.பவுல்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மு.க.புருஷோத்தமன், ஆர்.ரமேஷ், இ.அருளேஸ்வரி, வி.நடராஜன், பி. ஜீவானந்தம், எம்.சாரங்கபாணி, டி.வேளா, ஆர்.சங்கர், எம்.சீனிவாசன், எம். முருகன், என்.வினோத் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மணவிழா வரவேற்பில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

மணவிழா வரவேற்பில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப. ரங்கநாதன், ஐ.சி.எப்.வ. முரளிதரன், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார், தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், டி. லோகேஷ், எஸ்.தனசேகர், டி.துரைகண்ணன், பி.ஸ்ரீராமுலு, ஆர்.எஸ்.சித்திக், எம்.அசோக்குமார், இரா. தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர். காஞ்சனா, பி.சூரி, பி. பழனி, இலா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எம். தாவூத்பீ, எல்.டி.தாமஸ், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி, என்.ராமச்சந்தின், எஸ்.முருகன், எம்.டி.தமிழ்செல்வன், பி.டி.சி.எஸ். ரவி, கே.பி.ஆதவன்மணி, டி.சந்திரசேகர், பா.அன்பரசு, என்.பொன்முடி, பி. ஊமைதுரை, கே. ஜார்ஜ்குமார், கே.சாரதா, பி. அமுதா, யோகபிரியா தனசேகர், சி.ஸ்ரீதணி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எம்.மகேஷ்வரன், பி. சங்கர் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

பல்லாவரத்தில் ரூ.2.10 கோடியில் புதிய பள்ளிக் கட்டிடம், பூங்கா, நூலகப் பணிகள்!

பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

பல்லாவரம் டிச.5 -

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 ஈசா பல்லாவரத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை ஏற்ப வகுப்பவகுப்பறைகள் இல்லாததால் கூடுதல் வகுப்பறைகள் வேண்டும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோர்களிடம் இருந்தும் அதே போல சுபம் நகர் பகுதியில் பூங்கா மற்றும் நூலகம் அமைத்து தர வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி இடம் கோரிக்கை வைத்து வந்தனர்

இந்த கோரிக்கையை ஏற்று கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், பூங்கா மற்றும் நூலகம் அமைக்க திட்டமிடப்பட்டது.

அதன்படி ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம், ரூபாய் 90 லட்சம் மதிப்பீட்டில் பூங்கா மற்றும் நூலகம் ஆகியவற்றுக்கு புதிய கட்டிடங்கள் கட்டும் பணியை மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இதில் பல்லாவரம் இ.கருணாநிதி எம் எல் ஏ கலந்துகொண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், பூங்கா மற்றும் நூலகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார் .

அப்பொழுது மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர்கள் கழக நிர்வாகிகள், நலச்சங்க நிர்வாகிகள், ஆகியவர்கள் உடன் இருந்தனர்.

பல்லாவரத்தில் புதிய வகுப்பறை கட்டிடங்கள் நூலகம் பூங்கா ரூபாய் 2.10 கோடி மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்ட மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார் அப்பொழுது மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

துணை முதல்வர் பிறந்தநாள் விழா! மூ.குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

குன்றத்தூர் முதியோர் இல்லத்தில் உணவு - மருத்துவ முகாம் - நல உதவிகள்!

அ.தமிழ்மாறன் வழங்கினார்!

காஞ்சிபுரம், டிச. 5-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு 27.11.2024 மதியம் 1.00 மணிக்கு திருப்பெரும்புதூர் சட்டமன்ற தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் திருமுடிவாக்கம் மூ.குமார் ஏற்பாட்டில், குன்றத்தூர் சாய் முதியோர் இல்லத்தில் மதிய உணவு, மருத்துவ முகாம், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன் கலந்து கொண்டு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பிரதிநிதி என்.குணசேகர், நகர துணை செயலாளர்கள் R.K.அபிபுன்னிசா, என்.கருணாநிதி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர் ரவிச்சந்திரன், துணை ஒருங்கிணைப்பாளர் ந.சத்யராஜ், தொகுதி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் ஏ.ஜெ.சுலைமான், ஒன்றிய நகர பேரூர் தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் வ.வீரபாண்டியன், எம்.பிரபு மாறன், எம்.முத்துவேலன், க.யுவராணி இரா.தமிழரசன், திருமுடிவாக்கம் ஊராட்சி கழக நிர்வாகிகள் சங்கர், ப. வைத்திலிங்கம், மு.தமிழ்மணி, மு.பொன்மணி, க.சரண்ராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

125 வது வட்டம்

திருமதி. கல்யாணி மறைவு!

8 ஆம் தேதி படத்திறப்பு!

சென்னை, டிச. 5 -

தென்மேற்கு மாவட்டம், மயிலை 125-வது வட்டக் கழக முன்னோடி மறைந்த மு.தங்கம் அவர்களின் மனைவியும் 125-வது வட்டக் கழக முன்னாள் செயலாளர் மு.பஞ்சநாதனின் உறவினருமான த.கல்யாணி கடந்த மாதம் மறைவெய்தினார்.

அன்னாரது 16 ஆம் நாள் நிகழ்ச்சி 7.12.2024 அன்று இரவு 7மணிக்கு எண். 17-9, நொச்சிக்குப்பம், சென்னை - 4 -ல் உள்ள அவரது இல்லத்தில் படத்திறப்பு நிகழ்ச்சியும், 8.12.2024 ஞாயிறு காலை 9 மணிக்கு காரியம் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இதில் படத்திறப்பு - காரியத்தில் வட்டக் கழகத்தினர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்துகின்றனர்.